செ.வெ.எண்: 24 நாள்: 15.10.2016

## பத்திரிகைச்செய்தி

## கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் 2016-2017

2016-17-ஆம் ஆண்டுக்கு கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிருக்கு கீழ்க்கண்டுள்ளபடி நடத்தப்படவுள்ளது.

ஆடவருக்கான கையுந்துபந்து, கால்பந்து, கபாடி விளையாட்டுப் போட்டிகள் 22.10.2016 அன்றும், மகளிருக்கான கையுந்துபந்து, கால்பந்து, கபாடி விளையாட்டுப் போட்டிகள் 23.10.2016 அன்றும் மீமிசல் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகுதிகள்: போட்டிகளில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். அதற்குரிய சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

கடற்கரை விளையாட்டுப் போட்டிகளில் கீழ்க்கண்டுள்ள எண்ணிக்கையில் ஆடவர் மற்றும் மகளிர் ஒரு அணிக்கு விளையாட அனுமதிக்கப்படுவார்கள்

கடற்கரை கால்பந்து ஆடவர் மற்றும் மகளிர் விளையாட்டில் ஒரு அணிக்கு 5 நபர்களும், கடற்கரை கையுந்துபந்து ஆடவர் மற்றும் மகளிர் விளையாட்டில் ஒரு அணிக்கு 2 நபர்களும், கடற்கரை கபாடி ஆடவர் மற்றும் மகளிர் விளையாட்டில் ஒரு அணிக்கு 6 நபர்களும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இடத்தினை பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளுதல் வேண்டும். மாவட்ட அளவிலான போட்டிகளில் முதலிடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.500/- உம், இரண்டாமிடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.350/- உம், மூன்றாமிடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.200/- உம் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

போட்டிகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ள விளையாட்டு வீரர்கள் 22.10.2016 அன்று காலை 8.00 மணிக்குள்ளும், விளையாட்டு வீராங்கனைகள் 23.10.2016 அன்று காலை 8.00 மணிக்குள்ளும் போட்டிகள் நடைபெறும் இடமான மீமிசல் அரசு மேல்நிலைப் பள்ளி மைதானத்திற்கு வந்து தங்களது அணியின் பெயரினை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**